முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்

ஐ.டி.எண்.16/2024

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ம் தேதியில் ராஜேஷ் என்பவரது வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி.A.K.நாசினி, Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 03.04.2025.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | ராஜேஷ் |
| 2. | தந்தை பெயர் / கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| 3. | தொழில் | : | |
| 4. | வயது | : | |
| 5. | முகவரி | : | |

**முதல் விசாரணை : -**

தொழிலாளர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய அடையாள அட்டையின் நகல் **தொ.த.சா.ஆ.1** ஆகும். எதிர்மனுதாரர் நிர்வாகத்திலிருந்து எனக்கு அளிக்கப்பட்ட சம்பள ரசீதுகளின் நகல் **தொ.த.சா.ஆ.2** ஆகும். எதிர்மனுதாரர் நிர்வாகம் எனக்கு வழங்கிய இஎஸ்.ஐ.அடையாள அட்டை நகல் **தொ.த.சா.ஆ.3** ஆகும். 27.02.2021 அன்று ஒன்றுப்பட்ட தொழிலாளர் கூட்டமைப்பு சங்கத்தில் இணைவது சம்மந்தமாக பொதுகுழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல் **தொ.த.சா.ஆ.4** ஆகும். தொழிலாளர்களின் சட்ட விரோத நடவடிக்கை சம்மந்தமாக 21.3.2021 அன்று பொது குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல் **தொ.த.சா.ஆ.5** ஆகும். நிர்வாகத்தினர் தேர்தல் சம்மந்தமாக அளித்த அறிவிப்பு நகல் **தொ.த.சா.ஆ.6** ஆகும். தேர்தலில் பணி குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பு **தொ.த.சா.ஆ.7** ஆகும். 29.03.2021 தேதியன்று எங்கள் சங்கம் தொழிற்தாவா எழுப்புவது குறித்து அனுப்பிய கடிதம் **தொ.த.சா.ஆ. 8** ஆகும். 08.04.2021 அன்று தொழிற்சங்கம் நிர்வாகத்திற்கு பொது கோரிக்கைகள்

வலியுறுத்தி அனுப்பிய கடிதத்தின் நகல், திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகலுடன் கூடியது **தொ.த.சா.ஆ.9** ஆகும். 30.06.2021 அன்று தொழிற்சங்கம் எழுப்பிய தொழிற்தாவாவின் சமரச அதிகாரி அனுப்பிய அழைப்பாணையின் நகல் **தொ.த.சா.ஆ.10 ஆகும்**. 16.09.2021 அன்று தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தொழிலாளர் அந்தஸ்து வழங்க கோரி எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதம் **தொ.த.சா.ஆ 11** ஆகும். 16.09.2021 தேதியன்று தொழிற்சங்கம் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுகோரிக்கைகள் குறித்து எழுப்பிய தொழிற்தாவாவின் **தொ.த.சா.ஆ.12** ஆகும்.அந்த தொழிற்தாவாவில் நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரை **தொ.த.சா.ஆ.13** ஆகும்.நிர்வாகத்தின் பதிலுரைக்கு தொழிற்சங்கம் தாக்கல் செய்த பதிலுரை **தொ.த.சா.ஆ.14** ஆகும்.
28.2.2022 அன்று தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை **தொ.த.சா.ஆ.15** ஆகும். 09.06.2022 அன்று தொழிற்சங்கம் சங்க நிர்வாகிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தொழிலாளி அந்தஸ்து வழங்க கோரி தாக்கல் செய்த மனுவின் நகல் **தொ,.த.சா.ஆ.16** ஆகும். என் வேலை நீக்க சம்மந்தமாக சமரச அதிகாரி முன்பாக நான் தாக்கல் செய்த மனுவின் **தொ.த.சா.ஆ.17** ஆகும். அந்த மனுவில் சமரசம் ஏற்படாததால் தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை **தொ.த.சா.ஆ.18** ஆகும். வேலை நீக்கம் சம்மந்தமான நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரை **தொ.த.சா.ஆ.19** ஆகும். நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரைக்கு நான் தாக்கல் செய்த எதிருரை **தொ.த.சா.ஆ.20** ஆகும்.தொழிலாளர் உதவி ஆணையர் இந்த தாவாவில் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை **தொ.த.சா.ஆ.21** ஆகும். தொழிற்சங்கம் எழுப்பி கோரிக்கைகள் தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்த அரசாணையின் நகல் **தொ.த.சா.ஆ.22** ஆகும். ஊதிய உயர்வு உள்ளிட்ட பொது கோரிக்கைகள் அரசாங்கம் வெளியிட்டஅரசாணை எண். 808 ன் நகல் **தொ.த.சா.ஆ.23** ஆகும். தொழிற்சங்கம் எழுப்பிய கோரிக்கைகள் குறித்த அரசாங்கம் வெளியிட்ட அரசாணையின் எண்.809 ன் நகல் **தொ.த.சா.ஆ.24** ஆகும்.

கதவடைப்பு சம்மந்தமாக தொழிற்சங்கம் தாக்கல் செய்த நீதிபேராணையின் மனுவின் நகல் **தொ.த.சா.ஆ.25** ஆகும்.
**(தொ.த.சா.ஆ. 6 மற்றும் 7, எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**
**(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

(Sd).Tmt.S.Uma Maheswari,
Presiding Officer,
Principal .Labour Court,Vellore.